ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/43 - 2019 ඔක්තෝබර් මස 29 වැනි අඟහරුවාදා - 2019.10.29

*2147/43 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டம்**

*26(1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் கட்டளை*

*2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சராகிய ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க ஆகிய நான், இந்தக் கட்டளையின் மூலமாக, இதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலப் பிரதேசத்தை, குறித்த சட்டத்தின் நோக்கத்திற்காக ஒரு சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

ஜோன் அந்தோனி இம்மானுவெல் அமரதுங்க,
சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்
கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
*2019, ஒற்றோபர் 22.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

இரணவில சுற்றுலா அபிவிருத்தி வலயத்தின் எல்லைகள்

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில் மகாவெவ பிரதேச செயலாளர் பிரிவில், இரணவில மேற்கு மற்றும் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள முறையே இரணவில, கலஹிட்டியாவ மற்றும் துடுவாவ ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 138.125 ஹெக்டெயார் மற்றும் 27.913 ஹெக்டெயார் அளவுடைய, நில அளவையாளர் நாயகத்தின் P2937 மற்றும் P3021 ஆம் இலக்கப் பூர்வாங்க நில அளவைத் திட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணியின் சகல பகுதிகளும். இந்தக் காணியின் எல்லை பின்வருமாறு :

வடக்கு : காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுச்குச் சொந்தமான இரணவில தோட்டம் ;
கிழக்கு : கலஹிட்டியாவ கிராமம் மற்றும் லுணுஓயா ;
தெற்கு : துடுவாவ வடக்கு ;
மேற்கு : தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவினால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள்.

11-1014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.